புதினப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்

[illegible] (1889)
[illegible]
[illegible]

DUPLICATE

பத்திராதிபயம்

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம்: ஆ ௧-க்கு ரூ. ௨-௨௫.
வெளியூர், இந்தியா: „ ரூ. ௩-௨௫.
தொலைப்பகுதி: „ ரூ. ௩-௭௫
தனிப்பிரதி சதம் -௱௫.

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு மாண்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்

| | | ரூ. ச. |
|---|---|---|
| முதன்முறைக்கு— | ஒருகலம் | ௫-௵0, |
| „ | அரைக்கலம் | ௩-00, |
| „ | கால்கலம் | ௨-௵0 |
| „ | ஒரு அங்குலம் | -௵0, |

அடுத்தமுறைகட்கு அடி விகிதங்களில் அரைவாசி

புத்தகம் - உ௮ | யாழ்ப்பாணம்:—நள௵ மாசிமீ ௨௰௮ ௧௯௧௭ம் ௵ மார்ச்சுமீ ௧௨. | இலக்கம்— ௯௫

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிகுல அனைச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய இருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது துலங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் ரோதும் மதம்பூத்த விநாயகன்றன் கனதல் வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

### விளம்பரம்.

## இலாபத்தை அடையுங்கள்.

நீங்கள் உங்களுக்கு வேண்டும் பட்டு வஸ்திரங்களைப் பிறரிடம் வாங்க உத்தேசிக்குமுன் எங்களிடம் தருவித்துப்பாருங்கள்.

திருப்திகரமாயில்லாவிட்டால் உடனே திருப்பியனுப்பிவிடுங்கள். உங்கள் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

காசியிற் பிரபல பட்டுவர்த்தகம் கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி யென்ருல் உலகத்திலுள்ள பெரிய வர்த்தகர்கள் உத்தியோகஸ்தர்கள் முதலிய சகலரும் நன்கு அறிவர்.

உங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் எங்கள் விலைவிபர ஜாப்தா உடனே அனுப்புவோம்.

## பட்டுக் "கூறை"ப் புடைவைகள்.

ரோஸ் பச்சை நீலம் வெண்காயவர்ணம் வெளிர்பச்சை சிலேட்கலர் கிளிப்புளு கத்தரிப்பூ மேகவர்ணம்போன்ற பலவித நவீனகலர்களில் உடல் சாதா பட்டு உயர்ந்த சரிகையினுல் நூதனமான கரைகளும் முகதலை முந்தாணியுமுள்ள ௧௬ முழப் புடைவை ஒன்றுக்கு விலை ரூபா ௫0 முதல் ௬0 வரை.

மேற்படி கலர்களில் உடல் சாதா பட்டு சரிகை டேப்புக்கரையும் நகிஞ முகதலையுமுள்ள ௧௬ முழப் புடைவை ஒன்றுக்கு விலை ரூபா ௨௫ முதல் ௩0 வரை.

சரிகைச்சும் நாணயத்துக்கும் நாங்கள் உத்தரவாதம்.

K. S. MUTHIAH & CO.,
"Silk House",
BENARES CITY.

## இலங்கைச் சீனிக் கம்பனி.

### பனங்கட்டி.

1917 - ம் ஆண்டிலே பனங்கட்டி செய்யப்படும் காலத்தில் 28,80,000 ரூபா பெறுமதியான பனங்கட்டி தேவை.

இதை வாசித்துப் பணக்காரராகுங்கள்.

சிங்களவர் தென்னைகளால் பெரும் பணக்காரராகின்றனர்.

அவர்கள் கெட்டிக்காரர். நல்லாய் வேலைசெய்கிறார்கள்.

தமிழர்கெட்டித்தனத்திற்குறைந்தவர்களா? அல்லது அதிகசோம்பேறிகளா?

சீனிக்கம்பனியார் யாழ்ப்பாணத்தில் செய்யப்படும் பனங்கட்டியை ஒப்பந்தமாகவாவது அல்லது கைரொக்கத்துக்காவது வாங்க ஆயத்தமுள்ளவர்களாயிருக்கின்றார்கள்.

ஒருகண்டி [560 இறாத்தல்] பனங்கட்டிக்கு 30 ரூபா கொடுப்பார்கள்.

இது உனக்குக் கட்டுமா - நன்ருக யோசி.

ஒரு மரத்தில் ஒரு நாளைக்கு அரைக்கலன் அல்லது இரண்டுநாளைக்கு ஒரு கலன் கருப்பநீர் சேர்க்கலாம்.

ஒரு மரத்தில் நாலுமாசத்துக்குக் கருப்பநீர் சேர்க்கலாம்.

ஆகவே, கருப்பநீர்காலத்தில் ஒவ்வொரு மரத்திலும் 60 கலன் கருப்பநீர் சேர்க்கலாம்.

60 கலன் கருப்பநீரிலிருந்து 66 இறாத்தல் பனங்கட்டி செய்யலாம்.

ஒவ்வொரு ஏக்கர் பனந்தோப்பிலும் சராசரி 200 மரங்களிருக்கக்கூடும்.

ஒரு ஏக்கரில்2,000 இறாத்தல் பனங்கட்டி பெறலாம்.

ஒரு ஏக்கரில் 22 கண்டி பனங்கட்டி பெறலாம்.

22 கண்டி பனங்கட்டி 660 ரூபா பெறுமதியுள்ளது.

ஆகவே, ஒரு ஏக்கரிலே நாலுமாசத்தில் 660 ரூபா பெறலாம்.

கருப்பணி சேர்ப்பவனுக்கு இதில் அரைவாசியைக் கொடுத்தாலும் உனக்கு 330 ரூபா லாபமாகின்றது.

### புத்திமதி.

இந்த முயற்சியில் கையிட விரும்புவோர்க்கு 50ரூபாவுக்கு மேற்படாத செலவுடன் வைச் செங்கல்லாலும் களிமண்ணாலும் எப்படிப் பனங்கட்டி செய்யுமிடங்களைச் செய்துகொள்ளலாமென்பதை நாம் காட்டிக்கொடுப்போம்.

பனங்கட்டி செய்யுமிடங்களை இப்படிச் செய்துகொண்டால் விறகுச்செலவு குறைவாகும்.

மரங்கள் எவ்வளவதிகமாகக் கள்ளுக் கட்டப்படுகின்றனவோ அவ்வளவதிகமாக அவற்றில் கள்ளு ஊறும்.

முதல்முறை அதிகமாக ஊறுவிட்டாலும் வரவர அதிகமாக ஊறும்.

ஒவ்வொருமரத்திலும் ஒவ்வொருபாளையிலும் கள்ளுச்சேர்க்கலாமென்பதை அறிந்துகொள்ளவும்.

முதல் வருஷத்தில் கள்ளுக் குறைவாயிருந்தாலும் இரண்டாம் வருஷத்தில் அதிக கள்ளு ஊறும்; மூன்ரும் வருஷத்தில் இன்னும் அதிக கள்ளு ஊறும். அதன்பின் ஒவ்வொரு வருஷமும் ஒரேமாதிரியாகவே அதிக கள்ளு ஊறும்.

இவ்வளவாக நெற்செய்கையும் புகையிலைச்செய்கையும் அதிக நயத்தைக் கொடுக்கமாட்டாது.

தென்னைச்செய்கையால் பணக்காரரான சிங்களவருண்டு; ஆனுல், நெற்செய்கையால் பணக்காரரான சிங்களவரில்லை.

ஆதலால், தென்னையால் சிங்களவர் பணக்காரராவதுபோல நீங்களும் பனையால் பணக்காரராய் வாருங்கள்.

### விளம்பரம்.

### சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளுமிதனுல் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே யிப்போது இதைலேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலி வகைகள் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தசாமானை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் நடுக்கல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, குன்வாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0 அரைறாத்தலுக்கு ரூபா ௧0. கால் றாத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஆயுர்வேத வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை,
கொழும்பு.

## பவளக்கொடிச்சேலை.

மிகவும் நேர்த்தியானது!

௧௬ முழம் நீளம்!! உழைக்கத்தக்கது!!!

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச் சேர்ந்த சாக்லேட் நிறம் போல் பவளக் கொடிகள் போட்டு, சுற்றிலும் சிறு கரை கட்டியிருக்கின்றன. இது புதுமாதிரி இதுவரைக்கும் தயாரானதில்லை. இக்காலத்துக்கு மிகவும் உபயோகமானது. இதை ஒவ்வொரு ஸ்திரீகளும் தரித்துக் கொண்டு அலங்கார பூஷிதர்களாய்ச் சந்தோஷப்படுவீர்களென்று நம்புகிறோம்.

சேலை ஒன்றுக்கு விலை ரூபா ௨—௮—0

மதுரை ஜின்னடி சேலை.

இது மிகவும் உயர்ந்த மல்லில் கெட்டித்தாரயமுள்ளது. புட்டாக்கள்போட்டிருக்கின்றன.

சேலை ஒன்றுக்கு விலை ரூபா ௩—0—0.

விலாசம்:—

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்டு, மதராஸ்.

### விளம்பரம்.

சிலிப்பலகைகள், கட்டில் கதிரைகளிச்சிறு முதலிய மரச்சாமான்கள், வேண்டிய நீளங்களிற் பனைமரம், கண்ணுப்பு நியாயமான விலைக்குக் கொடுக்கப்படும்.

எம். எஸ். வேலுப்பிள்ளை,
தோரி சாய்ப்புத்தெரு,
யாழ்ப்பாணம்.

### விளம்பரம்

**சகலவிதமான அச்சுவேலைகளும்**
மிக அழகாகவும்
வெகு விரைவாகவும்
செய்துகொடுக்கப்படும்.
சைவப்பிரகாசயந்திரசாலை
"இந்துசாதன" ஆபீஸ்
வண்ணார்பண்ணை.

### விளம்பரம்.

முதல் தரமான ஹெங்கிஸ் கலிக்கற ஓடுகள் யாழ்ப்பாணம் பெருங்குளக் கிழக்குப் பசகத்து ரோட்டில் இருக்கும் கட்டங்கியில் சகாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு,
சி. த. மெ. முத்தையாபிள்ளை.

விலை சகாயத்திற்கும்
ஜவுளி நாணயத்திற்கும்
பேர்போனகம்பனி எது?

## மதுரை மு. க.
## இராமையர் அன் சன்ஸ்.

எங்கள் ஜவுளிக்கம்பனியில் சுமார் ௫0 வருஷ காலமாக எங்கள் நேர் பார்வையின் பேரில் நெசவுகாரர்களை கொண்டு பல தேசங்களிலுமுள்ள வியாபாரிகளுக்கும் மற்றும் குடித்தனகாரர்களுக்கும் ஏராளமான தினுசுகள் தயார் செய்து கொடுத்துக்கொண்டும், ஏராளமான தினுசுகள் கைவசம் வைத்துக்கொண்டும், விரும்பி எழுதும் தினுசுகளை யாதொரு பிசகின்றி அனுப்பியும் விசேஷ வியாபாரம் செய்து வருகிறோம் என்பது உலகம் பூரா அறிந்த விஷயம் தவிர தற்கால நாகரீகத்திற்கு தக்கபடி பலவூர் அநேக நூதன தினுசுகளும் வரவழைத்து ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்பலாபத்திற்கு சேரிலும், வீ பீ யிலும் அனுப்பிக்கொண்டு வருகிறோம். அசலூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து வீ பீ யில் அனுப்புவோம்.

F. M S. பெடரேடெட் மலாய்நாடுகளில் இருப்பவர்கள் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும் அல்லது பாங்க் மூலமாய் பெற்றுக்கொள்ளலாம். சிங்கப்பூர், பினங்கு என்னும் இடங்களுக்கும் வீ பீ யில் அனுப்புவோம்.

எங்கள் ஜவுளி விபர விலை யாப்தா (Catalogue.) இனுமாக எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

மு. க. ராமய்யர் அன் சன்ஸ்
சுதேசி ஜவுளி வியாபாரிகள்,
மேலக் கோபுர வீதி
மதுரை.

## பட்டுக் குட்டை.

அசல் பட்டு! முழுமையும் பட்டு!!
எல்லாம் பட்டு!!

5½ முழ நீளமும் 2½ முழ அகலமுமுள்ள குட்டை 1-க்கு, விலை ரூபா 2—8—0
வீ. பி சார்ஜ் அணு 4

இந்தப் பட்டுக் குட்டைகள் மிகவும் நேர்த்தியாகவும் நாணயமாகவும் பளபள வென்று பிரகாசிக்கும். இவை சிரசில் சுற்றிக்கொள்ளவும், தேகத்தின்மேல் போட்டுக்கொள்ளவும், அனுகூலமாக இருக்கும். பெண்களுக்கு மேல்தாவணியாகவும் உபயோகிக்கலாம்.

விலாசம்:—

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்டு, மதராஸ்.

## விளம்பரம்.

### ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள்.

சுறுவைத்தை யென்னுமிடத்திலிருக்கும் அரசாட்சியாரின் ஆஸ்பத்திரிக்குத் தேவையான சாப்பாட்டுச் சாமான்களை, ஒப்பந்தக்கடுதாசிகளேற்றுக்கொண்ட நாள் முதல் 1920-ம் வருஷம் புரட்டாதிமாதம் 30-ந் தேதி வரைக்கும் ஒன்று இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு ஒப்பந்தமாய்க் கொடுக்கிறதற்கு ஒப்பந்தக்கேள்விக் கடுதாசிகள் 1917-ம் வருஷம் பங்குனிமாதம் 13-ந் தேதி மத்தியானம் பன்னிரண்டுமணி வரைக்கும் கொந்திறாத்து விசாரணைச் சங்கத் தலைவரால் கொழும்பிலிருக்கு மவருடைய கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் வேண்டியவிபரங்களை அரசாட்சியாரின் 'கசற்' பத்திரிகையில் பார்த்துக்கொள்ளலாம். அல்லது பிரதான சிவில் மெடிக்கல் காரியஸ்தருக்கு எழுதியறிந்துகொள்ளலாம்.

### ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள்

1917-ம் வருஷம் ஐப்பசிமாதம் முதலாந் தேதி தொடக்கம் 1920-ம் வருஷம் புரட்டாதி மாதம் 30-ந் தேதி வரைக்கும் ஒன்று இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு, யாழ்ப்பாணம், மாந்தோட்டை, முல்லைத்தீவு, பருத்தித்துறை, அம்பாந்தோட்டை, திசமஹாராம ஆகிய இவ்விடங்களிலிருக்கும் அரசாட்சியாரின் ஆசுபத்திரிகளுக்குத் தேவையான சாப்பாட்டுச் சாமான்களை ஒப்பந்தமாய்க் கொடுக்கிறதற்கு ஒப்பந்தக்கேள்விக் கடுதாசிகள் 1917-ம் வருஷம் பங்குனிமாதம் 13-ந் தேதி மத்தியானம் பன்னிரண்டு மணி வரைக்கும், கொந்திறாத்து விசாரணைச் சங்கத் தலைவரால், கொழும்பிலிருக்கு மவருடைய கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் வேண்டிய விபரங்களை அரசாட்சியாரின் 'கசற்' பத்திரிகையில் பார்த்துக்கொள்ளலாம். அல்லது பிரதான சிவில்மெடிக்கல் காரியஸ்தரிடம் எழுதியறிந்துகொள்ளலாம்.

### பத்திரக்கிரயவரவு.

| ஸ்ரீ. | ரூ. ச. |
|---|---|
| அ. கனகசபாபதிக்குருக்கள், திரிகோணமலை | 3-25 |
| S. வீரசிங்கம், சங்கானை | 3-25 |
| க. தம்பையா, பன்னூர் | 3-25 |
| S. சபாபதிப்பிள்ளை, திரிகோணமலை | 3-25 |
| சி. வைத்தியலிங்கம், வண்-கிழக்கு | 10 00 |
| M. நாகலிங்கம், மானிப்பாய் | 3 25 |

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: நள௵ மாசிமீ ௨௰௳.

## மறுபிறப்புண்மை. ௫.

### பிறவி பேதம்.

கடவுள் சருவகாருண்ணியர், பக்ஷபாதம் சிறிதும் இல்லாதவர், நீதிபரர், இங்ஙனமான கடவுள் ஆன்மாக்களை அளவிறந்த பேதங்களுக்கு இடனாகப் படைத்து அப்பேதம் காரணமாக அந்த ஆன்மாக்கள் பலதிறப்பட்ட அனுபவங்களை அனுபவிக்குபடி செய்தற்குக் காரணம் ஒன்று வேண்டப்படும். காரணம் இன்றி ஆன்மாக்களைக் கடவுள் துன்பம் அனுபவிக்கச் செய்வர் என்றால் அவர் காருண்ணியர் எனப்படமாட்டார் காரணமின்றிச் சில ஆன்மாக்களுக்குச் சுகத்தையும் வேறு சில ஆன்மாக்களுக்குத் துக்கத்தையும் கொடுப்பார் என்றால் அவர் பக்ஷபாதமில்லாதவர் எனப்படமாட்டார்; காரணமின்றி யாதொரு ஆன்மாவைத் தண்டிப்பார்என்றால் அவர் நீதிபரர் எனப்படமாட்டார். உலகத்திற் காணப்படும் சிருட்டி பேதங்களோ அனந்தம் அவற்றுள்ளே சுகதுக்கங்களை அனுபவிக்குந் தகுதியுடைய சீவதோற்றங்களைத்தான் நாம் எடுத்துப் பரீக்ஷிப்பதன்றால் அவைகள் தாமும் அளவிறந்தபேதமுடையனவாகக் காணப்படும். அந்தச் சீவதோற்றங்கள் எல்லாம் ஆன்மசம்பந்தமுற்ற சீவபிராணிகளேயாதலின், இந்தப் பிராணிகளை இங்ஙனம் பல்லாயிரம் பேதங்களுக்கிடனாகப் படைத்து, அப்பேதகாரணமாக அவைகள் பலபேதப்பட்ட அனுபவங்களை அனுபவிக்குமாறு கடவுள் செய்தமைக்குக் காரணம் என்னை? உலகத்திலே காணப்படும் சீவபிராணிகளை நிலையியற்பொருள் இயங்கியற்பொருள் என்னும் இரண்டு பெரும் பகுதிகளாக வகுத்துக் காட்டலாம். அந்தப் பகுதிகளைப் பின்னும் எடுத்து வகுக்குமிடத்து நிலையியற்பொருள்களை லோகங்களாகவும் தாவரங்களாகவும் இயங்கியற்பொருள்களைக் கிருமிகள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் ஆகவும் வகுத்துக் காட்டலாம். இந்தத் தோற்றங்கள் எல்லாம் ஒன்றோடொன்று மிகப் பேதமுற்றுக் கிடக்கும். இவற்றுக்குரிய அனுபவங்கள் தாமும் தம்முட் சிறிதும் ஒவ்வாது மிகப் பேதப்படுமே. இந்தச் சீவதோற்றங்களிடத்தெல்லாம் ஓர் ஒரு ஆன்மா உண்டென்பது சத்தியமாயின், இவற்றை இங்ஙனம் பேதப்படுத்திய காரணம் என்னை என்பது அறிவுடையார் எல்லாம் கூர்ந்து ஆலோசிக்கற்குரியதோர் விஷயமாகும். இந்தச் சீவதோற்றங்களுள் ஒன்றை மற்றொன்றன் பயன் நோக்கிக் கடவுள் சிருட்டித்தார் என்றால், ஒருவர்பொருட்டாகப் பிறிதொருவரைக் கடவுள் துன்புறுத்தார் எனப்பட்டு, அவர் பக்ஷபாதமும் நீதிகேடும் வன்கண்மையுமுடையார் எனப்படுவர். இன்னமும் ஓர் உயிரின் பொருட்டாகப் பிறிதோர் உயிரை வருத்தாது, இவ்வுயிரால் அவ்வுயிர்க்கு எய்தற்பாலதாகிய சலாக்கியத்தை எல்லாம் வல்லராகிய கடவுள் அளித்தருளுதல் கூடாதா? கூடும் எனின், ஒருயிர்க்காகப் பிறிதோருயிரைச் சிருட்டித்துக் கடவுள் வருத்தினரென்பது அவருடைய பூரணஞானத்துக்கும் வரம்பிலாற்றலுக்குமே பெருந் தோஷமாய் முடியுமன்றே! அன்றியும் உலகத்துள்ள சீவதோற்றங்களுள்ளே எத்தனைகோடி தோற்றங்கள் பிறசீவதோற்றங்களுக்குச் சிறிதும் பயன்படாது கிடக்கின்றன? எத்தனை கோடி தோற்றங்கள் பிற தோற்றங்களுக்குப் பயன்படாமையோ டொழியாது, பல தீங்குகளை விளைக்கின்றன ஆகவே இவற்றையெல்லாம் ஒன்றனுக்கொன்று பயன்படுமாறு கடவுள் சிருட்டித்தார் என்பது கூடாதாதலின், இப்பேதங்கட்குக் காரணம் வேறொன்றிருத்தல்வேண்டும் என்பது தெற்றெனப் புலப்படும்.

இன்னமும் இந்தச் சீவதோற்றங்கள் அனைத்துள்ளும் மனிதன் ஒருவனே முத்தியின்பத்துக்குப் பக்குவியாக, மற்றைத் தோற்றங்கள் அந்தப் பக்குவம் சிறிதுமின்றிக் கிடத்தலால், மனிதனுக்குமாத்திரமே அந்தப் பெரும் பேற்றுக்குரிய பக்குவத்தை அளித்து, ஏனைத் தோற்றங்கட்கெல்லாம் அப்பக்குவத்தைச் சிறிதாவது கொடுத்தலின்றி அவைகளை இந்த உலகத்திற்றானும் மனிதனுக்கு அடிமைப்பட்டு வாழுமாறு கடவுள் சிருட்டித்தார் என்றால், இதுபோலும் பக்ஷபாதம் பிறிதும் ஒன்றுண்டென்று சொல்லத் தக்கதாமோ?

ஆகவே சீவசிருட்டியிற் காணப்படும் இந்தப் பேதங்களை எல்லாம் நாம் எடுத்து ஆராயுமிடத்து, இந்த ஆன்மாக்களுடைய மேல் விளைப்பயனும் இப்பயன் பற்றிப் பெறப்படும் அவற்றது தகுதியும் காரணமாகவே கடவுள் இவற்றை இங்ஙனம் பேதப்படுத்திப் பிறப்பித்தார் என்பது தானே போந்திடும்.

௨ இனி ஏனைச் சீவதோற்றங்களை ஒழித்து மனிததோற்றத்தைமாத்திரமே எடுத்து ஒரு சிறிது ஆராய்வாம். இந்த மனிதர்கள் எத்துணைப் பேதங்களுடையராய்க் காணப்படுகின்றார்கள்! இவர்கள் (௧) அறிவாற் பேதப்படுவோரும் (௨) குணத்தாற் பேதப்படுவோரும் (௩) குலத்தாற் பேதப்படுவோரும் (௪) உருவாற் பேதப்படுவோரும் (௫) செல்வத்தாற் பேதப்படுவோரும் (௬) தேசத்தாற் பேதப்படுவோரும் (௭) காலத்தாற் பேதப்படுவோரும் (௮) வயதாற் பேதப்படுவோரும் (௯) பாலாற் பேதப்படுவோரும் (௰) தேக ஆரோக்கிய நிலையாற் பேதப்படுவோரும் (௧௧) அனுபவத்தாற் பேதப்படுவோரும் (௧௨) விவேகத்தாற் பேதப்படுவோரும் எனப் பலபேதப்படுவர். இந்தப் பேதங்களை எல்லாம் பூரணஞானமும் பூரண கிருபையும், பூரணநீதியுமுடையராகிய கடவுள் யாதொரு காரணமின்றி அமைத்தார் என்பது அறிவுடையார்க்கு ஏற்புடைத்தாகுமா? இந்தப் பூவுலகத்திலே சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய மனிதர்கள்தானும் யாதொரு காரணமின்றி இங்ஙனமான பேதங்களைத் தம்மவர்களுள்ளே அமைப்பா என்றால் அவர்களை ஏனையோர் பார்த்து என்சொல்லமாட்டார்? ஒரு பிதா தனது புதல்வர்களுள் இங்ஙனமான பேதத்தை யாதானுமொரு நியாயம் இன்றி அமைத்துவைப்பான் என்றால், அவனை நீதியுடையான் என்று யாராவது சொல்லமாட்டுவரா? இந்தப் பேதங்களால் மனிதர்களுடைய அனுபவம் எத்துணைப் பேதப்படுகின்றது? அதனை அடுத்த பத்திரிகையில் ஒருசிறிது விளக்கிக் காட்டுகின்றாம்.

பிழை திருத்தம்:—சென்ற பத்திரிகையிலே இந்த விஷயமாக எழுதப்பட்ட வியாசத்தில், ௨-வது பந்தியில் ௪௦-ம் வரியில் ''கொள்ளாமோ எனின் கொள்ளாம் என்க'' என்றபாலது ''கொள்ளலாமோ எனின் கொள்ளலாம் என்க'' எனவும், ௪௮-ம் வரியில் ''நிலைமை மேற்கொண்டு' என்றபாலது ''நிலைபெறமேற்கொண்டு' என்றும் பிழைபட அச்சுச் சேர்க்கப்பட்டமையால் அவற்றைத் திருத்தி வாசித்துக்கொள்க.

## சமாச்சாரம்.

தேசாதிபதி யவர்களின் சுகவீனம்:—நமது தேசாதிபதி சேர் ஜோன் அன்டேர்சனவர்கள் இப்போது அதிக சுகவீன முற்றிருக்கின்றனரென வறிந்து மிகவும் விசனமானோம். இவர் விரைவிற் சுகமடைய ஈஸ்வரன் கிருபைசெய்வாராக.

கொழும்புத்துறைமுகமும் பிரயாணிகளும்:—கொழும்புத் துறைமுகத்துக்குவரும் கப்பல்களிலிருந்து கரையிலிறங்குவோர் தாமேறிவந்த கப்பலின் பிரதான உத்தியோகஸ்தரிடமிருந்து ஓர் வழித்துண்டு (Pass) பெற்றுக் காட்டினாலன்றி இறங்க விடப்படமாட்டார்களெனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஜனோபிவிர்த்திச் சங்கம்:—நிகழும் நள௵ மாசிமாதம் 7௳ ஞாயிற்றுக்கிழமை இரவு எழுமணியளவில் டிெ சங்கத்தின் பரிபாலனத்தின் கீழ் சிவியாதெரு ஸ்ரீ. பார்வதி வித்தியாலயத்தில், மருதனார்மடம் இராமநாதவித்தியாலய ஆசிரியருள் ஒருவராகிய ப்ரம்மஸ்ரீ. வி. சி. மகாகணபதி சர்மா அவர்களால் ''நந்தனார்'' சரித்திரம் யாழ், வில்லிவளுத், மிருதங்கம் முதலான பக்கவாத்தியங்களுடன் யாவரும் விளங்குமாறு இனிய பாக்களுடன் பிரசங்கிக்கப்பட்டது மண்டபமானது சான்மருங்குஞ் சனங்களினால் நிறையப்பெற்றிருந்தது பிரசாரகரவர்கட்கு வந்தனோபசாரம் கூறப்பட்டபின் ஏறக்குறைய பதினொன்றரைமணியளவில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் சமாத்தியாயிற்று. கடித.

சட்டநிரூபண சபை:—இலங்கைச் சட்டநிருபண சபையின் கூட்டமொன்று இந்த பிப்ருவரி௴ 5௳ கூடிற்று. இக்கூட்டத்திற்குத் தேசாதிபதியவர்கள் தமது சுகவீனத்தின் பொருட்டுச் சமுகமளிக்கக்கூடாதிருந்தமையால் இலங்கை இராணுவத்தலைவர் பிரிக்கேடியர் ஜெனரல் ஹெர்சற் தொம்சனவர்கள் தேசாதிபதியவர்களினிடத்தில் சபாநாயகராயிருந்து கூட்டத்தை நடத்தினர். இக்கூட்டத்திலே கௌரவ ஸ்ரீமாந். பொ. இராமநாதனவர்கள் கலகத்திற் சம்பந்தப்பட்டு சிட்சையடைந்த மூன்றுபேர் அனுப்பிய மனுக்களைச் சபைமுன் கொண்டுவந்தபின், கௌரவ மெஸ். கிறீசியவர்கள் இலங்கைக்கணித்தாயுள்ள கடல்களில் அபாயமடையும் கப்பல்களுக்குச்சகாயஞ்செய்ய என்ன ஆயத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவென ஓர் கேள்வி நிகழ்த்தினர். அப்பால் கௌரவ ஸ்ரீ அ. சபாபதியவர்கள் மதவாச்சிக்கும் காங்கேசன்துறைக்குமிடையில் முன்போல் புகைரதம் இரவிலும் ஓடும்படி செய்யவேண்டுமெனப்பல நியாயங்களெடுத்துக்காட்டி மிக்க சாதுரியத்துடன் பேசினர். இவரது கூற்றை கௌரவ ஸ்ரீ. பாலசிங்கமவர்களும், ஸ்ரீமாந். பொ. இராமநாதனவர்களும், மெஸ். பாய்ட்டனவர்களும் அனுவதித்துப் பேசினர். ஆயின் கொலோனியல் செக்கிறிற்றெறியவர்கள் சரிகுறைந்துகொண்டமையால் புகைரத ஓட்டத் [illegible] அவசியமாயிற்றெனச்சொல்ல கௌரவ ஸ்ரீ அ. சபாபதியவர்கள் தமது கேள்வியைநிறுத்திக்கொண்டனர். பின் கௌரவஸ்ரீ பாலசிங்கமவர்கள் யாழ்ப்பாண சுகம் இக்காலத்தில் திருப்தியற்றதாயிருப்பதால் அங்குள்ளகான்கள் வாய்க்கால்களைத் திருத்தி மாரிகாலத்தில் தண்ணீர் ஊர்மனைகளிற் றங்கிநில்லாது வெளியே ஓடிச்செல்லும்படி செய்வதற்கு யாழ்ப்பாண டிஸ்திறிக் முழுவதையும் அளந்துபார்ப்பதற்கு சில அளவு உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டுமெனக் கேட்க கௌரவ ஸ்ரீ. அ. சபாபதியவர்கள் அதனை அனுவதித்தனர். டக்தர் பேர்ஞண்டோ அவர்கள் மலேரியா சுரத்தாலேயே யாழ்ப்பாணத்தில் அநேகரிறக்கின்றமையால் ஸ்ரீ பாலசிங்கமவர்கள் கொண்டுவந்த நிர்ணயத்தில் ''சேர்வே'' என்ற சொல்லின்முன் ''மலேரியா'' என்ற சொல் சேர்க்கப்படவேண்டுமெனச் சொல்ல அதனைக் கௌரவ மெஸ் வண்டவோலவர்கள் அனுவதித்தனர். இந்த அளவுவிஷயத்தைக்குறித்து ஆலோசித்தற்கு டக்தர் பேர்ஞண்டோ அவர்களும், டக்தர் றதவோட் அவர்களும், ஸ்ரீ. பாலசிங்கமவர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

தேகவியோகம்:-காலஞ்சென்றுபோன பிரக்கிராசியார் ம-ா-ா-ஸ்ரீ. அ. சின்னத்தம்பியாரவர்களின் பௌத்திரனும், காலஞ்சென்றுபோன ஸ்ரீமாந் அத்துவக்காத் நாகலிங்கமவர்களின் மருகரும், பிரக்கிராசியார் ஸ்ரீ. சி. கந்தையா அவர்களின் சகோதரனுமாகிய அத்துவக்காத் ஸ்ரீ. சி. செல்வத்துரையவர்கள் சென்ற சுக்கிரவாரத்தன்று தேகவியோகமாகிவிட்டனர். ஸ்ரீ. செல்வத்துரையவர்கள் அதிக விடாமுயர்சியுடையவரும், அழுக்காறவா வெகுளி முதலிய துர்க்குணங்கள் சிறிதுமில்லாதவருமாகிய ஓர் உத்தமகுணசீலர் இவரையிழந்து துன்புறுமிவரது சகோதரர் ஸ்ரீ கந்தையா அவர்களோடும், மருகர் ஸ்ரீ. அண்ணாமலையவர்களுடனும் ஏனைய சுற்றமித்திரருடனும் நாமுமனுதாபப்படுகிறோம்.

—சோலைவரிமதிப்பு உத்தியோகஸ்தருளொருவராய் நெடுங்காலமிருந்தவரும், நற்குடிப்பிறப்புடையவருமாகிய ஸ்ரீ. கதிரித்தம்பி செல்லப்பா அவர்கள் சென்ற திங்கட்கிழமை காலஞ்சென்றுவிட்டனர். இவரையிழந்து துன்புறும் இவரது சகோதரர் ஸ்ரீ சின்னத்தம்பு, ஸ்ரீ. இளையதம்பி என்பவர்களுடனும் புத்திரன் ஸ்ரீ. இராசா அவர்களுடனும் எமது அனுதாபமுமிருக்கிறது.

—வண்ணார்பண்ணையிலே ஓர் பிரபல பிரபுவாயிருந்து இறந்துபோன அம்பிகைபாகர் வீரவாகுரவர்களின் மனைவி காலஞ்சென்றுவிட்டனர். பிரக்கிராசியார் ஸ்ரீ. கதிரைவேற்பிள்ளை பீ. ஏ. அவர்கள் இவரது புதல்வர். திருவாங்கூர் எக்சயிஸ் கம்மிஷனராயிருந்து இளைப்பாறியிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ கா. பொன்னம்பலபிள்ளையவர்கள் இவரது மருகர் பிறக்டர் ஸ்ரீ. இராசநாயகமவர்கள் இவரது பௌத்திரர்.

—ஆரப்பற்றை சின்னக்குட்டியார் கதிர்காமத்தம்பியென்பவர் தமது இளம்பராயத்தில் பிப்ருவரி௴ 15௳ இவ்வுலகவாழ்வை நீத்துப் பரலோகப்பிராப்தியாயினர். இவர் ஆரப்பற்றை கந்தசுவாமிகோயில் மணியகாரனாக ஏற்பட்டு இரண்டுவருடமாகவில்லை. இவர் நற்குணநற்செய்கைகளாற் சிறந்தவர். கடித.

வெளிச்ச விடுகள்:—இலங்கையிலுள்ள வெளிச்ச வீடுகளில் சிறிது காலத்துக்குத் தீபங்களேற்றாதபடி தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

மாத்தளை விவேகானந்த சபை:—திருவருளாற் தற்போது ஆரம்பமாகி நடைபெற்றுவரும் இச்சபையாரின் 'இந்து பாடசாலை' மண்டபத்தில் சென்ற (19-2-17) திகதி ''கண்ணப்ப நாயனார்''சரித்திரவிஷயமாக யாழ்ப்பாணம் தமிழ்ப் பண்டிதர் ப்ரம்மஸ்ரீ. வ. மு. இரத்தினேஸ்வர ஐயரவர்களால் ஒரு பிரசங்கம் மிக்க திட்பமாகவும் விரிவாகவும் செய்யப்பெற்றது. கண்ணப்பநாயனார் சரித்திரத்தில் அநேக தத்துவார்த்தங்கள் இனிது விளக்கப்பட்டன. மேலும் மகாசிவராத்திரியாகிய (20-2-17) திகதி திடல்மாரியம்மன் கோவிலில் மேற்படி சபைப் பிரசாரகரவர்களால் 'ஆலய தரிசனம்'' என்னும் விஷயம் நன்கு பிரசங்கிக்கப் பெற்றது. இப்பிரசங்கம் ஸ்ரீ. க நடராசா அவர்களின் முயற்சியால் நடைபெற்றது. கடித.

பம்பாய்க் கோட்டில் நடந்த விசேஷ சம்பவம்:—பம்பாய் ஹைக்கோட்டில் சில இந்துக்கள் 1880 ரூபாவுக்கும் 1502 தோலா வெள்ளிக்கும் நெடுநாளாக வழக்காடினார்கள். எழு நியாயதுரந்தரர்கள் இவ்வழக்கில் தோற்றி நியாயமுரைத்தார்கள். ஒருநாள் வழக்காளியைச் சாட்சிக் கூட்டிலேற்றி விளங்கியபோது அவன் எதிரிகள் வழக்குப்பணத்தை யுத்தச்செலவிற்குக் கொடுக்கச் சம்மதித்தால் தனக்கும் அது சம்மதமாகுமென்றான். எதிரிகளைக்கேட்டபோது இவ்வழக்கிற்தோற்றிய நியாயதுரந்தரர்கள் தமக்குக் கொடுக்கப்படவேண்டிய பணத்தைக் கேளாதுவிட்டுவிடுவோரேல் தமக்கும் அதுசம்மதமாகுமென்றனர். நியாயதுரந்தரர்களும் இவ்வழக்கில் தமக்கு வேதனமாகக் கொடுக்கப்படவேண்டிய பணத்தைக் கேளாதுவிடச் சம்மதிக்க முழுப்பணமும் யுத்தச் செலவிற்காகக் கொடுக்கப்பட்டது.

கீழைத்தேச பாஷா கல்லூரி:—லண்டன் நகரிலே கீழைத்தேச பாஷைகளைக் கற்பிப்பதற்கு ஓர் கல்லூரி ஸ்தாபித்திருக்கின்றார்கள். இதற்கு லண்டன் நகரசங்கத்தார் ஒன்பதுவருஷத்திற்கு வருஷவீதம் 250 பவுனும், அங்குள்ள 'கோல்ட்சிமித்' கம்பனியார் 5000 பவுனும், சாட்டேற் இந்தியவங்குககாரர் 1000 பவுனும், ஐந்து வருடத்திற்கு வருஷவீதம் 100 பவுனும், ஹொங்கோங் அன் ஷேங்ஙைவங்குககாரர் 5வருஷத்திற்கு 200 பவுனும், இந்திய நாஷனல் வங்குக்காரர் மூன்றுவருஷத்திற்கு 100 பவுனும், இந்திய மேர்க்கன்றயில் வங்குக்காரர் 100 பவுனும், சேர் மார்க்கஸ் சாமுவேல் மெஸ் அன்டுறூஸ் என்னுமிருவர் தனித்தனி ஆயிரம் பவுனும் கொடுத்தார்கள். பிந்தியவர் நூறுபவுணகொடுக்க எண்ணியிருந்தும் இந்திய சேனவீரர் யுத்தத்திற் காட்டிய திறமைக்காக 1000 பவுண் கொடுத்திருக்கிறார்.

## சிதம்பரம் ஞானப்பிரகாச திருக்குளம்.

இத்திருக்குளப் படித்துறைத் திருப்பணித் தருமத்துக்குப் பொருள் உபகரித்தோர் பெயரும் தொகையும்:—

(25-ம் இலக்கப் பத்திரிகைத் தொடர்.)

| | |
|---|---|
| கருணாகரர், மட்டக்களப்பு | |
| பொ. அம்பலவாணர், ,, | |
| க. ச. கந்தையா, ,, | |
| மூவரும் சேரில் | 10-00 |
| இ. மாரிமுத்து உபாத்தியாயர் மூலமாக | |
| க. கார்த்திகேயஐயர், கோப்பாய் | 1-00 |
| சி. கெங்காதரஐயர் கொத்தாசிஸ், கோப்பாய் | 5-00 |
| சி. சிவகாமி அம்மை, கொழும்புத்துறை | 1-00 |
| தி. செல்லம், நீர்வேலி | 5-00 |
| சேரில். | |
| செ. சண்முகஐயர், காரம்பன் | 10-00 |
| சா. பார்வதி, வண்ணார்பண்ணை | 1-00 |
| ப. தெய்வானை, ,, | 3-00 |
| இ. நாராயணியம்மை 1-ம் முறை ஒன் | 5-00 |
| சி. சிவசம்பு, புத்தூர் மணியம் | 2-00 |
| | 43-00 |
| முன் வெளிப்படுத்திய தொகை: | 3825 61½ |
| ஆகத் தொகை: | 3868 61½ |

இங்ஙனம்,
நள௵ மார்கழிமீ
ச. பொன்னம்பலவன்,
சைவப்பிரகாச வித்தியாசாலை,
சிதம்பரம்.

## தந்திச் சமாசாரம்.

### யுத்தசங்கதிகள்.

(சிலோன்''அப்சேவர்' பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றன.)

பிப்ருவரி௴ 23௳.

பேர்சஸ் என்னும் ஆங்கிலகப்பல் கடலுள் அமிழ்த்தப்பட்டது வெடிகுண்டில் முட்டியோ அன்றேல் கப்பலில் ஏதும் வெடித்தோ அழிவாய்ப்பட்டதென்பது தெரியவில்லை. 1 ஐரோப்பிய கப்பற்காரனையும் 2 சீனரையும் தவிர மற்றெல்லோரும் தப்பிக்கொண்டனர்.

வாஷிங், ஹமில்ற்றன் என்னும் இரு கப்பல்களைக் கடலுள் அமிழ்த்தியதைக்குறித்துக் கண்டித்து சுவீடிஷ் அரசினர் ஜர்மனியருக்கு எழுதியிருக்கின்றனர்.

கடலுள் அமிழ்த்தப்பட்ட ''ஜோன் மைல்ஸ்'' என்னும் லண்டன் கப்பலிலுள்ள காயமுற்ற இரு கற்பித்தான்மாரும் இறந்த இருவரும் கரையிற் கொண்டுவந்து சேர்க்கப்பட்டனர். 14 பேரைக் காணவில்லை.

விக்டோரிய லூயிஸியா என்னும் ஸ்பானிய கப்பலை ஓர் அவுஸ்திரிய சப்மெறயின் கப்பல் சந்தித்து அதன்கணுள்ள 8 ஆங்கிலரைத் தன்வசம் ஒப்பித்துப் போகும்படி கேட்டபோது, ஸ்பானியகப்பற்காரர் தமக்குரிய சமுத்திரத்திற்றும் நிற்பதாகவும், கப்பலைக் கடலுள் அமிழ்த்திச் செல்வோமன்றி ஒருபோதும் ஆங்கிலரை ஜர்மனியரிடம் ஒப்புவிக்கமாட்டோமென்றும் கூற சப்மெறயின் அக்கப்பலைவிட்டுச்சென்றது.

கடலுள் அமிழ்த்தப்பட்ட "ரோசாலி" என்னும் கப்பலிலிருந்தோர் 9 பேர் மீட்கப்பட்டனர். 21 பேரைக் காணவில்லை. அழிவாய்ப்பட்ட கார்சோ வென்னும் கப்பலிலிருந்த கப்பித்தானும், பிரதான எஞ்சினியரும், இருகப்பற்காரரும் ஜர்மனியராற் கைதிகளாக்கப்பட்டனர்.

அமெரிக்காவைப் போல ஜர்மனிக்கும் ஸ்பானிய நாட்டிற்குமிடையிற் பிரயாணிகள் போக்குவரவு செய்தற்கு இருபகுதி இராசாங்கத்தாரும் உடம்படிக்கை செய்துகொண்டனர்.

குடிக்கோர்ட்டில் ஆங்கிலர் பகைவருக்குரிய ஓர் அகழின் பகுதியையும் 30 கைதிகளையும் பிடித்தனர். மிருமொன்று என்னுமிடத்திலும் ஓர் ஸ்தானத்தைப் பிடித்தனர்.

பகைவர் இக்கலிபாபிடக்கிற் கொல்டிலாஞ என்னுமிடத்தைப் பிடித்தபோது அவர்களாற் துரத்தப்பட்டனர். பலர் கைதிகளாக்கப்பட்டனர்.

கடலுள் அமிழ்த்தப்பட்ட ஸ்கொக்லண்டு என்னும் சுவீடிஷ் கப்பலில் 5அமெரிக்கர்களிருந்தனரென அமெரிக்க ஸ்தானாதிபதி கூறுகின்றார்.

பகைவர் நாடுகளிலுள்ள ஆங்கிலேய கைதிகளின் தொகை.

| | ஊரவர் | போர்வீரர் |
|---|---|---|
| ஜர்மனியில் | 4 500 | 34,500 |
| அவுஸ்திரியாவில் | 200 | 250 |
| பல்கேரியாவில் | 0 | 550 |
| துருக்கியில் | 700 | 10,800 (இவர்களுள் 8,800பேர் இந்தியர்) |
| | 5,4000 | 46,100 |

ஜர்மனியர் கைதிகளை வைத்து நடத்துவதற்கும் அவுஸ்திரியர் நடாத்துவதற்கும் அதிக பேதமுண்டாம்.

### பிப்ரவரி 24௳.

சீனவிலிருந்து பிரான்சுக்குக் கூலிக்காரரை ஏற்றிச்சென்ற 'அதொஸ்' என்னும் கப்பல் மத்தியதரைக்கடலில் அமிழ்த்தப்பட்டது. இரு டிஸ்திரோயர்க் கப்பல்களின் உதவிகொண்டும் ஒரு வள்ளத்தின் உதவிகொண்டும் அக்கப்பலிலிருந்தோர் 1450பேர் மீட்கப்பட்டனர்.

அல்சாஸ் லோறேனிற் பிரான்சியர் இடையிடையே குண்டுப்பிரயோகஞ்செய்தனர். சொபின்-பெசன்-வோக்ஸ் பகுதிகளிற் பகைவர் தாக்கியபோது பிரான்சியராற் துரத்தப்பட்டனர்.

சலோனிக்காவுக்குச் சைநியத்தை ஏற்றிச்சென்ற 'மின்னஸ்' என்னும் இங்கிலிய கப்பல் மாட்டப்பன் முனைக்கு மேற்கே 160 மைல் தூரத்திற் கடலுள் அமிழ்த்தப்பட்டது சைநியத்திற் சிலர் மீட்கப்பட்டனர்.

ஸான்டிஜ்க், நூர்டர்டிஜ்க், மீலண்டு காஸ்தர்லண்டு, ஜக்கற்றிரு, மினூடோ, பான்டோய்க் என்னும் ஒல்லாந்த கப்பல்கள் கடலுள் அமிழ்த்தப்பட்டன. ஒல்லாந்த நாட்டிலிருந்து இவற்றுள் 4 கப்பல்கள் பொருட்கள் ஏற்றிக்கொண்டு புறப்பட்டுப்போகும்போது இங்கிலிஷ் கால்வாயில் மேற்குப் புறமாக அமிழ்த்தப்பட்டன. தங்கள் கப்பல்களைக் கடலுள் அமிழ்த்தியதைக் குறித்து ஒல்லாந்த அரசினர் உடம்படிக்கைக்கு விரோதமென ஜர்மனியருக்கு எழுதியபோது ஜர்மனியர், சொல்வது சரியென்றும், ஆனால்சில சமையங்களில் இப்படி மோசம் நேர்தலைத் தவிர்த்தல் முடியாதென்றுந் தெரிவித்தனர்.

மினூடோ என்னும் கப்பல் கரையிற் கொண்டுவந்து சேர்க்கப்பட்டதென்றும், பான்டோய்க், ஸான்டிஜ்க், மீலண்டு என்னும் கப்பல்கள் இன்னுங் கடலுள் மிதந்துகொண்டிருக்கின்றனவென்றும் பிந்திய சமாசாரத்தால் அறியப்படுகின்றது.

கடலுள் அமிழ்த்தப்பட்ட அதொஸ் என்னும் கப்பலில் ஓர் அமெரிக்க மிஷனரியும் மோசம் போய்விட்டாராம்.

அழிவாய்ப்பட்ட ஸொக்லண்டு என்னும் கப்பலிலிருந்த அமரிக்கரனைவரும்மீட்கப்பட்டனர்.

சப்மறயின் விஷயத்தைக் கண்டித்துச் சீனர் பேசியபோது ஜர்மனியர் சீனர் கடுமையாயிருக்கின்றனரென்றும்; சீனருடைய சிலரைக் காப்பாற்றத்தகாத ஒழுக்குகள் செய்யப்படுமென்றுந் தெரிவித்தனர்.

பெக்ஜியர், உவாட்ஜவில்டு, இன்வர்சால்டு என்னும் ஆங்கில கப்பல்களும் வேறு இரு சிறிய ஆங்கில கப்பல்களும் கடலுள் அமிழ்த்தப்பட்டன.

ஜனவரிமாதம் 1-ந் தேதி தொடக்கம் பிப்ரவரி மாதம் 19-ந்தேதி வரையில் 1600 ஜர்மனியரை ஆங்கிலர் சிறைப்படுத்தினர்.

பிப்ரவரி 20௳ நிகழ்ந்த யுத்தத்தில் ஆங்கிலர் 120 ஜர்மனியரைச் சிறைப்படுத்தினர். 5யந்திரத்துப்பாக்கிகள் பிடிக்கப்பட்டன. புருசியரில் 300பேர்வரையில் மாண்டனர்.

பகைவர் அன்சரில் முக்கியஸ்தானங்களை விட்டகன்றனர். மிருமொன்று என்னுமிடத்தில் ஆங்கிலர் செயமடைந்து பெற்றிமொருமொன்றுட் பிரவேசித்தனர். வைர்ஸ்டாட்டென்னுமிடத்தில் 55 பேரைக் கைதிகளாக்கினர். ஆமன்டையரிற்குக் கிழக்கிலும் ஆங்கிலர் குண்டுப்பிரயோகஞ்செய்தனர். யப்பிறிசிற்குத் தென்கிழக்கே பகைவர் தாக்கியபோது துரத்தப்பட்டனர். சோமில் இடைவிடாத குண்டுப் பிரயோகம் நிகழ்ந்தது.

உவிசெம்பர்ஜ் என்னுமிடத்தில் ஜர்மனியர்பிரவேசிக்க முயன்றபோது பிரான்சியராற் துரத்துண்டனர். பிறிஎன்னுமிடத்தில் ஓர் பிரான்சிய ஆகாயாதம் வெடிகுண்டுகளைப் பெய்தது. பல ரதங்கள் ஸ்பிஸ்கோர்ட் என்னுமிடத்திலும் வெடிகுண்டுகளைப் பெய்தன.

இந்தியாவிலுள்ளவர்களைவிட இன்னும் 50,00 000 சைநியம் ஆங்கிலரிடத்துள்ளன.

14 பேரைக்கொண்ட ஒரு ஜர்மனிய சப்மறயின் உலச்சறன் என்னும் தீவுக்கணித்தாக நிலத்திற் பொறுத்துவிட்டது.

### பிப்ரவரி 25௳.

மொரேசாமி என்னுமிடத்திற் பிரான்சியர் குண்டுப்பிரயோகஞ் செய்தனர். லோறேன், வொஸ்கஸ் என்னுமிடங்களில் இடையிடையே யுத்தம் நடக்கின்றது.

### பிப்ரவரி 26௳.

நியூயோர்க்கிலிருந்து லிவப்பூலுக்குப் புறப்பட்ட லாகோனியா என்னும் 18000 தொன் கொண்ட கப்பல் எச்சரிக்கை யாதுமின்றிக் கடலுள் அமிழ்த்தப்பட்டது அதிலிருந்த 270 பேர் மீட்கப்பட்டனர் பிரயாணிகளில் 3 பேரையும் கப்பற்காரரில் 6 பேரையும் காணவில்லை பிரயாணிகளில் 3பேரும் கப்பற்காரரில் 6பேரும்மாண்டனர். இரு அமெரிக்க பெண்களும்மாண்டனர்.

பெனிபிசன்ற, ஐசர், பல்க்கொன், றஜடியர், லொன்கேஷத், ரோஸான் பிரின்ஸ் என்னும் ஆங்கில கப்பல்கள் கடலுள் அமிழ்த்தப்பட்டன.

பகைவர் சொசியன்சிற்கு வடகிழக்கிலும், எவிறேக் கோர்ட்டுக்கு மேற்கிலும் தாக்கியபோது பிரான்சியராற் துரத்துண்டனர். சிலர் கைதிகளாக்கப்பட்டார்கள். பகைவருக்குரிய 3 ஆகாயாதங்கள் கீழே கொண்டுவரப்பட்டன.

ஜர்மனிய டிஸ்திரோயர்க் கப்பல்கள் இங்கிலாந்திலுள்ள புரோட்ஸ்ரயர், மார்கேற் என்னும் கரைப்பட்டினங்கள்மீது குண்டுகளைப் பிரயோகித்தன. இதனால் ஒரு மனுஷியும் ஒரு பிள்ளையும் மாண்டனர். இருவர் காயமுற்றனர். இரு வீடுகள் சேதமடைந்தன. ஆங்கில கப்பல்களும் பகைவர் கப்பல்கள்மீது குண்டுகளைப் பிரயோகித்தன. ஆங்கில கப்பல்கள் யாதும் சேதமுறவில்லை. இருட்டாயிருந்தமையால் பகைவருக்குச் சேதமுண்டோ என்பதும் தெரியவில்லை.

### பிப்ரவரி 27௳.

குடிக்கோர்ட்டுக்குக்கிழக்கிலும், கொமிக்கோட்டுக்குத்தெற்கிலும் ஆங்கிலர்முன்னிட்டுச்சென்று தங்கள்ஸ்தானங்களைப் பலப்படுத்தினர். சோமில் ஆங்கிலருக்குரியஸ்தானத்திற் பகைவர் தாக்கியபோது துரத்தப்பட்டனர்.

இங்கிலாந்துக் கரையிலுள்ள மார்கேற்றுக்கும் புரோட்ஸ்டயர் என்னும் நகரத்திற்குமிடையே பகைவருக்குரிய டிஸ்திரோயர்க் கப்பல்கள் செய்த குண்டுப்பிரயோகத்தைக் குறித்து ஓர்பரிதாபமான செய்தி சொல்லப்படுகின்றது. 9 பேரைக்கொண்ட ஓர் குடும்பம் வசித்த ஒரு சிறிய வீட்டிற் பகைவர் பிரயோகித்த குண்டுகள் வீழ்ந்தன. அந்த வீட்டிலிருந்த பெண் மேல்மாடியிற் கிடத்தப்பட்டிருந்த தன் பத்துமாசக் குழந்தையை எடுக்கவிரும்பி அவசரமாய் ஓடிப்போனபோது குண்டுபட்டு வீழ்ந்திறந்தாள். ஒன்றுமறியாச் சிசுவும் காயமுற்றது. வேறுமிருபிள்ளைகள் பெரிய காயமடைந்தனர். (அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!! இ சா பர்.)

சிவெஸ்கி என்னுமிடத்திற்கு வடக்கே துருக்கியர் தாக்கியபோது ருஷியராற் துரத்தப்பட்டனர்.

கிழக்குப்புற யுத்த முனையிற் கடும் யுத்தம் நிகழ்வதாக ஜர்மனியர் கூறுகின்றனர்.

### பிப்ரவரி 28௳.

குமிக்கோர்ட், திரான்கில்வோய் என்னுமிடங்கட்கிடையே ஜர்மனியர் பின்வாங்க ஆங்கிலர் அவர்களைத் துரத்திச்செல்கின்றனர்.

துருக்கியர் 'குத்' என்னுமிடத்தை விட்டகன்றதாகத் தெரிகிறது.

ஜர்மனியருடைய சப்மெறயின் யுத்தத்தை அவுஸ்திரியரும் அங்கீகரித்தனர்.

பகைவர் கிம்பொலாங் கென்னுமிடத்தைத் தாக்கி ருஷியரிடமிருந்த சில உந்நத ஸ்தானங்களைப் பிடித்தனர்.

## கடிதம்.

### மதுபானம்.

ஐயா,

இலங்கையில் மதுபானம் வருஷந்தோறும் ஏறி ஏறிக்கொண்டே வருகின்றதென்பது மறுக்கொணாத உண்மை. யாழ்ப்பாணத்திற்றானே இற்றைக்கு ஐம்பது வருஷத்துக்குமுன் விற்ற கள்ளுச் சாராயக் குத்தகைத் தொகையையும் இந்த வருஷம் விற்ற அந்தக் குத்தகைத் தொகையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த மதுபானம் ஐம்பது வருடங்களுள் எத்தனைமடங்கு அதிகரித்துவிட்டதென்பது எல்லாருஞ் சொல்லத்தக்கது.

இந்தக் கேட்டுக்குக் காரணம் என்ன என்பது எங்கள்தேச விருத்தியிற் கருத்துடையோர் எல்லாரும் கவனிக்கவேண்டிய தொருவிஷயம். இலங்கையிலே மூலைக்குமூலை மதுபான விலக்குச் சபைகள் தாபிக்கப்பட்டிருந்தாலும், அவைகள் இந்தக் கேட்டின் மூலத்தை ஆராய்ந்து அதனைத் தடுத்தற்கேற்ற உபாயங்களைச் செய்வதாகத் தோன்றவில்லை.

ஆரியருடைய வேதங்களிலும் தமிழருடைய பழைய நூல்களிலும் மதுபானம் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது மெய். ஆனால் அந்தக்காலத்திலே மதுபானம் இவ்வளவு அதிகமாகப் பரம்பியிருந்ததாகச் சொல்லச் சிறிதும் இடமில்லை. தமிழர்களுக்குள் வழக்கமுற்றிருந்த மதுபானமும் அவர்கள் யவனர் முதலிய அந்நியதேசங்களோடு சம்பந்தப்பட்டபின்பே தலையெடுத்ததாகப் புலப்படுகின்றது.

இந்தியாவிலுள்ளவர்களுள்ளே அநாகரிகமுடையவர்களும் அறிவிற்குறைந்தவர்களுமாகிய வேடர் மள்ளர் முதலியோரே மதுவைப் பெரிதும் அருந்தினரெனப் பல புராணங்கள் கூறி அவர்கள்செயல்களையும்ஆங்காங்குக்கண்டியாநிற்கும். "துஞ்சினர் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும், நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்றும், "காதல் கவருடல் கள்ளுண்டல் பொய்மொழிதல், ஈதல் மறுத்தல் இவைகண்டாய் - தீஇல், சினையாமை வைக்குந் திருநாடா. செம்மை நிலையாமை பூண்டார் நெறி' என்றும் இங்ஙனம் பற்பலவிடங்களில் மதுபானம் கண்டிக்கப்பட்டிருக்கின்றது ஆனால், பௌத்தமதத்தைப் பின்பற்றியே சைவரும் மதுபானத்தைக் கண்டிக்கப் புகுந்தனரெனச் சிலர் சைவசமயத்தின் பெருமையிற் பொறாமைகொள்வார், ஏன்? கிறிஸ்துமதத்தைப் பின்பற்றியே சைவர் இங்ஙனஞ் செய்யப்புகுந்தனர் என்றுதான் ஒருவர் கூறினால் அவரை யார் என்னசெய்யக்கூடும்? வரைவின்றி, வந்தனவெல்லாம் கூறுவார் நாவையடக்க வரிதாமன்றோ! பௌத்த சமயந்தானே மதுபானத்தைக் கண்டித்ததென்றுதான் கொள்வோம் இப்போது பௌத்தநாடுகளிலே இந்த மதுபானம் எல்லை கடந்து பெருகி இருப்பதற்குக் காரணம் என்ன? சைவசமயந்தானோ? ஆக்ஷிப்படாமல் உண்மையை உற்றுநோக்குவதே பெரியோர் கடன்.

மேலும், முற்காலத்திலும் தற்காலத்திலும் கள்ளுண்டு களிப்போர் நாம் மேலே கூறியவாறு அறிவிற் குறைந்தவர்கள் என்பது கண்கூடே. கள்ளுண்பதால் வருங் கேடு நல்லறிவு மயக்கம். அறிவிற் குறைந்தோர் மதுவுண்பதனால் எய்தும் பயனுக்கும், அறிவாளிகள் மதுவுண்டலால் எய்தும் பயனுக்கும் அதிக பேதமுண்டு என்னவெனில், மது தன்னை யுண்பவனிடத்தில் முன்னரே நல்லறிவு அற்பமாயின், அந்த அற்ப நல்லறிவைத்தானே கெடுக்கவல்லதாகும். முன்னர் அவனிடத்தில் நல்லறிவில்லையாயின், மது, தன்னை யுண்டபின் கெடுத்தற்கு நல்லறிவில்லாமையால் முட்டுறாமல்லவா? என்றும் அறிவின்மையோடு கூடியிருப்பவன் என்றும் தீமை செய்வான் என்பது சகலரும் ஒத்துக்கொள்ளத்தக்கது. ஒருபோது, அப்படிப்பட்டவன் மதுவுண்டமையாற் சிறிது கூடிய தீமையைச் செய்தல் கூடும்.

இனி, கல்வியறிவுள்ளவர்கள், தற்கால நாகரிகம் படைத்தவர்கள், தக்க உத்தியோகம்வகித்தவர்கள், பலருடைய இன்ப துன்பங்களுக்குப் பொறுப்பைத் தம்மிடம்வகித்துள்ளவர்கள், செல்வமுடையவர்கள், இன்னோரன்ன பிறவற்றை உடையவர்கள், மதுவுண்ணத் தலைப்பட்டால் அதனால் வரும் அனர்த்தம் அனந்தமன்றோ? இது எதுபோலென்றால், வறியவன் வீட்டிலே கள்வன் திருடப் புகுந்தால் அதிகம் பொருளைத் திருடிக்கொள்ளமாட்டான் பரமஏழைவீட்டிற்புகுந்தால் ஒன்றையுந்திருடிக்கொள்ளமாட்டான்; ஓர் தனவந்தன் வீட்டிற் புகுந்தால் கள்வன் திருடத்தகும் பொருட்கள் பல; அதனால் அவனுக்கு நேரும் நஷ்டமும் அதிகம். அதுபோல், மது என்னுந் திருடன் அறிவிலியாகிய ஏழையின் மனமாகிய வீட்டிற் புகுந்து திருடும் அறிவாகிய தனம் சொற்பம். அத்திருடனே, அறிவாளியாகிய தனவானின் மனமாகிய வீட்டிற் புகுந்து திருடும் தனமாகிய அறிவு மிக அதிகமாகும். குறித்த திருடன் அறிவாளியின் அறிவைத் திருடுவான், கல்வியைத் திருடுவான், செல்வத்தைத் திருடுவான், மரியாதையைத் திருடுவான், உத்தியோகத்தைத் திருடுவான், இன்னோரன்ன பிறவற்றைத்திருடி ஈற்றில் அந்த அறிவாளியை ஏழையாக்கி மிக்க சங்கடத்துள்ளாக்குவான். இவற்றிற்கு உலகத்தில் நாம் கண்ணுற் காண்பனவும் காதாற் கேட்பனவுமாகிய திருஷ்டாந்தங்களேசான்றுமென்க.

மேற்கூறிய நாகரிகத்தின்பாற்பட்டார் சிலர், கள்சாராயமாகிய இழிந்த விலைகுறைந்த லாகிரிவஸ்துக்களை உண்பது தமக்குக் கௌரவக்குறைவென்று அவற்றை விலக்கி உவயின், பிறண்டி, விஸ்கி, பீர் முதலிய விலையுயர்ந்த நாகரிகமான மேலைத்தேசப்பானங்களை உட்கொள்வர். இவைகள் அறிவை மயக்குவதில் கள் சாராயமென்னும் இவற்றிற்குத் தோல்வியுறா. இடப்பட்டிருக்கும் பாத்திரங்களும், பருகப்படும் பாத்திரங்களும், விலைப்படுமிடங்களும், உண்டு களிப்பவர்களின் கூட்டமும், விலையுமே, இருவகை லாகிரிகட்கிடையேயுள்ள பேதம். தம்மைஉண்டாரின் அறிவைக் கெடுப்பதில் யாதும் பேதமில்லை என்பது, இருவகை லாகிரி வஸ்துக்களையும் உண்டாரைக் கண்டார்க்கு இனிது புலப்படும்.

போலி அறிவாளிகளால் அங்கீகரிக்கப்படும் விலையுயர்ந்த குடிவகைகள் முற்றாய் அந்நியதேசத்திலிருந்தே இங்கு கொண்டுவரப்பட்டன, கொண்டுவரப்படுகின்றன. அறிவுடையோரது அறிவு மரியாதை முதலியவற்றைக் கொள்ளைகொள்ளும் இக் குடிவகைகள் முன்னொருபோதும் இங்கு அறியப்படவேயில்லை. இவை அந்நியராலேயே கொண்டுவரப்பட்டன. இதனைத் துலாக்கோலன்ன மனமாட்சியுடையார் எவரும் மறுக்கத் துணியார்.

1522-ம் ஆண்டு முதன்முதல் ஓர் போர்த்துக்கேயகப்பல் கொழும்புத் துறைமுகத்தில் வந்து தங்கியது. அக்காலத்தில் இலங்கையைப் பரிபாலித்த அரசனாகிய ஒன்பதாந் தர்மபராக்கிரமவாகு (Daarma Parakramabahu IX) அக் கப்பலில் வந்திருக்கும் அன்னியர் யாரென அறிந்துவரும்படி தமது ஒற்றர் சிலரை யனுப்பினர். அவ்வொற்றர் மீண்டுவந்து, தாம் கண்ட அந்நியரைக் குறித்துக் கூறியதாவது:—

"There are now in our harbour of Colombo a race of men, exceedingly white and beautiful. They wear boots and hats of iron, and they are always in motion. *They eat white stones and drink blood* etc. (The italics are ours). [Foot note. The white stones mean bread, and the blood, red wine]". History of Ceylon published by the C. L. S. of Colombo.

[எங்கள் கொழும்புத் துறைமுகத்தில் அதிவெண்ணிறமும் அழகும் வாய்ந்த ஒருசாதி மனுஷர் வந்திருக்கின்றனர். அவர்கள் இரும்பினாற் செய்யப்பெற்ற பாதரட்சைகளையும் தொப்பிகளையும் அணிந்திருக்கின்றனர், அவர்கள் எப்பொழுதும் நடந்துகொண்டே திரிகின்றார்கள் வெள்ளிய கற்களை அவர்கள் உண்டு உதிரத்தைப் பானம்பண்ணுகின்றார்கள். [குறிப்பு:-வெள்ளிய கற்களென்றது கோதுமை அப்பத்தை, உதிரமென்றது செந்நிற உவயினை ]

இது கொழும்புக் கிறிஸ்தவ சங்கத்தார் ஆங்கிலத்தில் எழுதிய இலங்கைச் சரித்திரத்தினின்றும் மொழிபெயர்க்கப்பெற்றது. இதனானே உவயின் முதலிய குடிவகைகளை நமதுமுன்னோர் கண்டுதானுமிருக்கவில்லை யென்பதும் இவை போர்த்துக்கேயர் என்னும் அன்னிய புண்ணியவான்களாலேயே ஆதியில் இங்கே கொண்டுவரப்பட்டன என்பதும் பிறவும் இனிது புலப்படுகின்றன. மேலைத் தேசத்திலிருந்து இங்கே கொண்டுவரப்பட்ட இக்குடிவகைகளே நமது நாட்டின்கணுள்ள நவீன நாகரிகமாக்கட்குப் பெருங்கேட்டை விளைத்தற்குக் காரணமாயுள்ளன. இவற்றையெல்லாம் உள்ளவாறுணர்ந்த ஓர் தேசாபிமானி அத்தேசத்திலுள்ளாரது நன்மையைக்குறித்து உள்ளபடி எழுதப்புகின் உண்மை அபிமானமுடையோர்க்கு ஆத்திரம்வருதற்குக் காரணம் யாதும் இல்லையே.

எப்படியானாலும் இப்போது வரம்பு கடந்து மேற்பட்டிருக்கும் இந்த மதுபானக் கேட்டுக்கு ஆரியருடைய வேதங்களையாவது தமிழருடைய சாத்திரங்களையாவது காரணமென்றுசொல்வது கூடாது. இக்காலத்திலே ஆரியர்களுள்ளேயாவது தமிழர்களுள்ளேயாவது அவர்களுடைய பிராமணர்களிடத்தே இத்துர்வழக்கமுண்டென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். சைவசமயக் கோயில்களிலே 'இராப்போசனத்திலாவது பகற்போசனத்திலாவது' யாதொரு மதுநீர்பாவிக்கப்படுவதில்லை இரத்தத்துக்குப் பதிலாக மதுநீர் அருந்தப்படுவதுமில்லை எங்கள் குருமார் தாம் செய்யும் சடங்குகளிலே மற்றவரோடு சேர்ந்து 'ஒருவருடைய சுகத்தை ஒருவர் குடிப்ப' தில்லை. சத்திபூசை எனப்படும் அநாசாரபூசையை எமது சுத்தசமயம் பிரதிபாதிப்பதில்லை.

அன்னியதேசக் குடிவகைகள் எங்கள் ஊரிலே வந்து நுழைந்தமைக்கு ஆரியவேதங்களையாவது தமிழ்ச் சாத்திரங்களையாவது காரணம் என்பது சிறிதும் பெறப்படமாட்டாது. அந்நியதேசக் குடிவகைகள்தாமே எங்கள் தேசத்தில் உண்டாகும் கள்ளுச் சாராயம் முதலிய குடிவகைகளையும் அதிகப்படச் செய்தன என்பது எல்லாரும் ஒத்துக்கொள்ளத்தக்கது.

இந்த அந்நியதேசக் குடிவகைகள் எங்கள் ஊரில் எப்படி வந்து நுழைந்தன? எங்கள் சொந்தச் சமயத்தாரோ இவைகளை மேலைத்தேசங்களிற்சென்று அழைத்துவந்து இங்கே நுழைவித்தது? எங்கள் குருமார்தாமா இந்தக் குடிவகைகளை இங்கே குடிபுகுத்தினார்கள்? எங்கள் பிராமணக் குருமார்வீடுகளில் இக்குடிவகைகளைக் காணத்தக்கதோ? இவர்கள்வீடுகளிற்றானோ தப்பியல் உவயின் என்னும் திறமான குடிவகை வாங்கத்தக்கது?

இந்தக் குடிவகை இங்கே குடிபுகுந்தமைக்கும் குடிபுகுந்து நிலைபெற்றமைக்கும் ஏதுவான காரணங்களை விசாரித்தறிந்து, அக்காரணங்களை இனிமேல் இல்லாமற்செய்துவிடுவதே மதுபான விலக்குச் சபையார் செய்யவேண்டிய முதற்கடமையாகும்.

மதுபானவிரோதி.

## கர்மயோகம்.

(முற்றொடர்).

### மூன்றமத்தியாயம்.

"கர்மமர்மம்."

தன்னவயவங்களை உள்ளுக்கிழுத்துக்கொண்டிருக்குமோர் ஆமையை நாமெவ்வளவாயடித்தாலும் அந்த ஆமையானது அவைகளை வெளிகாட்டாததுபோல் தன்னெண்ணங்களைக் கட்டுப்படுத்திக்கொண்ட மனுஷனின் விசேஷகுணம் ஸ்தாபிக்கப்பட்டதாகும். அவன் தன் மனவிருத்திகளைக் கட்டுப்படுத்திக்கொண்டபடியால் அவனுடையசித்தத்திற்கு விரோதமானவைகளொன்றையும் வெளியிழுக்க முடியாது இப்படியிருப்பவன் தான் ஞானத்தையடைவான். இவனைச் சேடுசெய்ய முடியாது அவனை எங்கு விட்டாலும், எந்தக் கூட்டத்தின்மத்தியில் அவனிருந்தாலும் அதனாலொருகெடுதியும் அவனுக்குநேரிடாது. இப்படிச் சன்மார்க்கனாயிருக்கவிலும்பார்க்க மேம்பட்ட ஒரு நிலையிருக்கிறது அதாவது முத்தியை விரும்பும் இச்சையுடையவனாயிருத்தல் (முமுட்சுத்வம்) பந்தநீக்கத்தி லிச்சைகொள்ளல். எல்லாவிதமான யோகங்களினும் முடிவு இதுதான் என்பதை நாம் அறியவேண்டும். எல்லா யோகங்களும் இதற்கேவழிகாட்டுகின்றன. புத்தர் ஞானத்தினாலும் கிறிஸ்து பக்தியினாலுமடைந்த அதைக் கர்மத்திலுமடையலாம். புத்தர் ஓர் கர்மயோகியாயும், கிறிஸ்து ஓர் பக்தனாயுமிருந்தபோதிலும் இருவரும் ஒரே முடிவை அடைந்தார்கள்.

மேற்சொல்லிய பந்தநீக்கமென்பது நன்மையினால்வரும்பந்தத்தையும் தீமையினால்வரும்பந்தத்தையும் நீக்குதல் என்பதை நாமறியவேண்டும். இரும்புச்சங்கிலியினாற் பிணிக்கப்படுவதுபோற் பொற்சங்கிலியினாற் பிணிக்கப்படுவதும் பந்தமே.

உன் காலில் ஓர் முள் தைத்தால் அதை வேறோர் முள்ளைக்கொண்டே வெளியில் எடுத்துப் பின்பு இரண்டையுமெறிந்துவிடுவதுபோல எம்மிடத்துள்ள கெட்ட சுபாவத்தை நல்லவை செய்வதனால் தவிர்க்கவேண்டும் எம்மனத்திலெழுங் கெட்ட எண்ணங்களை நல்ல எண்ணங்களினால் தவிர்க்கவேண்டும். அப்படியாகக் கெட்டவைகளைத் தவிர்த்தபின் நல்லவைகளையுந் தவிர்த்து ஒருவிதபற்றுமற்று இருத்தல்வேண்டும் நாம் கர்மத்தைச் செய்யவேண்டும். ஆனால் அச்செய்கைகள் அல்லது எண்ணங்கள் எம்மனத்தில் ஆழ்ந்து பதிவடையாதிருக்கவேண்டும்.

நாம் செய்யும் ஒவ்வொரு கர்மமும் பதிவடைகின்றனவே அப்படியிருக்க ஆழ்ந்து பதிவடையாது எப்படிக் கர்மத்தைச் செய்யலாமெனின் அதற்குதாரணமாக, ஒருநாளில் நூற்றுக்கணக்கான மனுஷர் ஒரு வீதிவழியாய்ப் போகும்போது நாம் பார்க்கிறோம், அவர்களுள் எவனேனுமொருவனிருந்ததாக வைத்துக்கொள்வோம். அப்படிப் பார்த்த நாம் அன்றிரவு வீடுசென்று உட்

சார்ந்துகொண்டு நாம் பார்த்தவர்களின் முகத்தை ஞாபகத்திற்குக் கொண்டுவரத் தெண்டித்துப் பார்த்தால் எம் நேசனின் முகமே எம்ஞாபகத்திற்கு வருவதாகக் காண்போம். அன்று பகல் ஒரு நிமிஷத்தான் பார்க்கக்கூடியதாயிருந்த எமக்குப் பற்றுள்ள எம் நேயனின் முகமே எம் மனதிற்குவருவதைக் காணக்கூடியதாயிருக்கும் மற்றவையெல்லாம்மறைந்துவிடுகின்றன. ஏனெனில் இந்த ஒருவனிலிருந்த பற்றானது எம்மனதிலோர் ஆழ்ந்த பதிவை ஏற்படுத்திவிட்டது. அதுவுமன்றி இந்த ஒரு நிமிஷம் மாத்திரம் எம் நேயனைப் பார்த்ததானது முன்னவனைப்பற்றி எம்மனதிலேற்பட்டிருந்த பதிவுடன் சேரக்கூடியதாயுமிருந்தது. மற்றும் பற்றின்றிப் பார்த்த முகங்களெல்லாம் மறைந்துபோய்விட்டன. அவைகள் எம்மைப் பந்திக்கவில்லை. இப்படித்தான் ஆழ்ந்த பதிவு ஏற்படுத்தாமற் கர்மமியற்றுவது.

ஆனபடியால் வேலைகள் நடந்துகொண்டிருக்கட்டும். இடைவிடாது தொழில் செய் ஆனால் அவைகளுன்மனதைத்தாக்காதிருக்கட்டும் பற்றுவைத்துச் செய்யும் வேலைகளால் அகத்தியம் தாக்குதல்கள் ஏற்படும்.

நீ இந்தச் செகத்தில் ஓர் அன்னியனைப்போல் அதற்குமுனக்கு மோர்வித சம்பந்தமுமில்லாதவனைப்போல் இருந்து வேலைசெய்துவரவேண்டும். அவ்வேலைகளினாலுனக்குப் பந்தமேற்படுத்திக்கொள்ளாதிரு. பந்தப்படுவதானது மிகவும் பயங்கரமான ஒரு காரியம். இந்தச் செகத்தானது எம்முடைய இடமல்ல. இது நாம் செல்லும் அநேகவித நிலைகளிலொன்று. பிரபஞ்சமானது ஆத்மாவுக்காக வேண்டற்பாலதன்றி ஆத்மா பிரபஞ்சத்திற்காக வேண்டியதல்ல. ஆத்மாவானது அதனை யனுபவித்து அவ்வனுபவங்களால் ஞானத்தைப்பெற்று விடுதலையடைதற்காகவே பிரபஞ்சமுள்ளது. இதை நாம் மறவாதிருக்கும்வரையில் பந்திக்கப்படமாட்டோம். இதைவிட்டு நாம் பிரபஞ்சத்தோடு ஆபாசித்து அதற்காக ஆத்மாவுள்ளது என்று எண்ணி மோசம்போகிறோம். மனுஷன் சீவிக்கிறதற்காகச் சாப்பிடுகிறானென்பதைமறந்து சாப்பிடுகிறதற்காகச் சீவிக்கிறதாக எண்ணுகிறோம். இதே நாம் செய்யும் தப்பு. அப்படி எண்ணிப் பிரபஞ்சத்திற்பற்றுவைக்கிறோம். அப்பற்றானது எம்மனத்திலாழ்ந்த சமஸ்காரங்களை ஏற்படுத்திவிடுகிறது. அவைகள் எம்மைப் பந்தித்து எங்களைச் சுவாதீனத்திற்கு(விடுதலை)ப் பதிலாக அடிமைகளாக வேலைசெய்யப்பண்ணுகின்றன. (வரும்).

குவாலலம்பூர்,
7—2—17.

இங்ஙனம்,
“நசிகேதன்”.

## மஹோபகாரம்.

(இவ்வியாசம் சென்ற தைமீ நடந்த யாழ்ப்பாணச் சைவசித்தாந்த மகா சமாசத்திற் படிக்கப் பெற்றது.)

அஃதாவது பெரிய உதவி இஃதென விளக்குதல். இவ்விஷய ஆராய்ச்சியாற் பெறப்படும் பயன் யாதென்னில், தன்னை யுணர்ந்து தலைவராகிய சிவபெருமானின் அருட்பிரஸாதம்பெற்றுப் பிறவி யொழித்தல் கைகூடப் பெறுதலாகுமென்க. மஹா+உபகாரம், மஹோபகாரம். மஹா=பெரிய; உபகாரம்=உதவி, நன்றி. முற்றுத்தொழில் வன்மையில்லார்க்கு உதவிவேண்டுமென்பது வெளிப்படையாகும். நிற்க.

க-வது உதவிகளின் பிரிவு.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள மனிதர்கள் ஒருவருக்கொருவர் செய்யு முதவிகள், செய்யாமற் செய்த வுதவியும், காலத்தினாற்செய்தவுதவியும், பயன்றூக்காது செய்தவுதவியும் என மூவகையுடையன.

செய்யாமற் செய்த வுதவியாவது:— ஒருவன் றனக்கு முன்னேருபகாரமுஞ் செய்யாதிருப்பச் செய்யுமுதவி.

காலத்தினாற் செய்த வுதவியாவது:—ஒருவருக்கு ஒருவர் இறுதிவந்தகாலத்திற் செய்யும் அரியநன்மை.

பயன்றூக்காது செய்த வுதவியாவது:—இது செய்தால் இன்னது பின் செய்வானென்று கருதாது ஒருவன் செய்யுமுதவி. இம்மூன்றுதவிகளுமேயன்றி இன்னும் பற்பல பிரிவுகளைக்கொண்ட வுதவிகளுள்ளன. அவற்றுள் ஒருவர் இது செய்யவேண்டுமென்று கூறுமுன்னே செய்யும் உதவியும், சொன்ன காலத்திலே மறக்காது செய்யும் உதவியும், சொன்ன காலத்திற் புரியாது பன்னாட் போக்கிச் செய்யு முதவியும் முறையே உத்தமஉதவி மத்திமஉதவி அதமஉதவி என்று மூன்று பிரிவுகள் முன்னோர் நூல்களிற் காணப்படுகின்றன. உதவி வேண்டப்படுதற்குக் காரணம் சர்வவல்லமை யின்மையேயாம். இந்த வுலகத்திலேயுள்ள சராசரங்களில் விசிஷ்டமுடைய மானுடர்கள் சிற்றறிவும் சிறுதொழிலுமுடையராக இருத்தலின், தாந்தாமே எல்லாக் காரியங்களையும் நன்கு செய்யுமாற்றலில்லாதவர்களாக இருக்கின்றார்கள். பிறப்பு இறப்பு இல்லாதவர் கடவுள். பிறப்பும் இறப்பும் என்ற இவைகளால் வருந்துபவர்கள் சீவர்கள். சிவசீவ வேற்றுமை அறிவுடையாரகத்ததாகும்.

தைத்திரிய உபநிஷத்தில்;

யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்பிரயந்த்யபிஸம் விசந்தி! தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத் பிர்ஹ்ம!!

என்று கூறப்பட்டிருக்கிறது. இச்சுலோகத்தின் கருத்தருமாறு:—“எதனிடத்திலிருந்து (சித்சித்) பொருள்கள் தோன்றினவோ, எதனால் உண்டான பொருள்கள் ஸ்திரம் பெறுகின்றனவோ அதையே அறிய விரும்புகசன். அஃதே பிர்மம்” என்பதாம். இதனாலே உலகத்துக் காணப்படுபவைகள் அழியுந்தன்மையுடையன என்பதும், அழியாதவர் வேதோபநிஷதங்களில் “பிர்ம” சப்தத்தாற் பிரதிபாதிக்கப்படும் சிவபெருமானாரே என்பதும் சூசகமாம். ஆகவே சீவர்கள் அழிவில்லாமையால் அறிவின் னிறைந்த பரம்பொருளைப் பிரார்த்தித்து, அவராற் கிடைக்கும் உதவியைப் பெறவேண்டியது மிக்க ஆவஸ்யகமாகும். தேகத்துடன் வாழும் நாட்களிற் கிடைக்கும் எம்மினோருதவிகள் அவ்விறைவன் றில்வியாறுக் றாந்தா லெய்தியனவே! அன்றி அவ்வுதவிகள் அழிதற்பான்மையன வுமாம். இதனாற் சிறிய உதவிகள் நிலைமை உணர்க.

2 பெரிய உதவி.

இனிப் பெரிய உதவி எதுவெனச் சிந்திக்கற்பாலது. மேலே கூறியவுதவிகள் போலாது நியத்தாவாகிய ஒருவராற் கிடைப்பதாய், என்றுமுள்ள ஆன்ம ஈடேற்றத்திற்கு இன்றியமையாததாய் உள்ள உதவியே பேருதவியாகும். எனவே கடவுள் இயமசாவுத்கிருஷ்டமான மாநுஷ்ய ஜன்மத்தைத் தந்ததும், இத்தேகத்தோடு பொருந்திவாழும் எத்தனை வருஷங்களுண்டோ, அத்தனை வருஷங்களிலும் ஆன்மாவுக்குச் சுகதுக்கங்களைக் கொடுத்துப் புசிப்பிப்பதும் மகோபகாரமேயாம். துக்கம மகோபகாரமாகுமா? அறியாது கூறினீர் எனத் தடை நிகழுமாகால், அவ்விறைவர் ஆன்மாக்களுக்கு நல்வினை தீவினைகளின் பயன்களை அனுபவிப்பித்துச் சிவானந்தப் பெரும்பேற்றைக் கொடுத்தற்குத் திருவுள்ளமுடைய காருண்ணியராகலின், அது பொருந்தாதென மறுக்க. என்னை? தமக்கெனக் கொள்ளாது ஆன்மாக்கள் பொருட்டுக் கொண்ட திருவருளுருவின ராகலானென்க.

“உருவருள் குணங்களோடு முணர்வருளுருவிற் றோன்றல, கருமமுமருள் அரன்றன் கரசரணாதி சாங்கம், தருமருளுபாங்க மெல்லாந் தானருடன் கொண்டின்றி, யருளுருவுயிருக்கென்றே யாக்குவனமித்தனன்றே”

என்பது இவ்வுண்மைவிளக்கு முதாரணமாகும்.

இங்ஙனம் அருட்டிருமேனியுடைய ஈசுவரன் பேதங்களாகத் தேகங்களை வகுத்தது வைஷம்யமாகுமே என்னில், அன்று. ‘சாந்தமுபாஸித’ எ-ம்; “சாந்தம் பதமாலகந்திதம்” என்றும், அப்பெருமானை உயர்த்திச் சமஸ்த சாஸ்திரங்களும் உத்கோஷித்தலாலும், தேகத் தொடர்பாளராகிய தந்தை தாயர் முதலினோர் மக்களுக்குக் குற்றத்திற்கேற்ற தண்டஞ்செய்து சீர்திருத்தல் கண்கூடாக யாவருங் காணக்கூடியதாக விருத்தலாலும், ஆத்மநாதராகிய இறைவர் வன்கண்மையின்றி, அநுக்கிரக மாத்திரையானே பல்வித தேகங்களையும், போகங்களையும் கொடுப்பாரென்பது இனிது தெளிவாகும்.

இன்னும், வைத்தியர்கள் செய்யுந் தேக சிகிச்சைபோல ஆத்ம வைத்தியநாதராகியஇறைவரும் மலநோய் நீக்கத் திருவுளங்கொண்டு இத்தேகத்தை யுதவி மகோபகாரம் புரிந்து பெரிய வைத்தியநாதராகத் திகழுகின்றார்.

பிரமாணம்.

“அருளினா லுரைத்தநூலின் வழிவாரா ததமஞ் செய்யின், இருளுலா நிரயத்திட டிரும்பவந் தீர்ப்பன், பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புண்ணியந் தீர்ப்பன, மருளுலா மலங்கள ர்கு மருந்திவை வயித்தியநாதன்”

3 மகோபகாரமடையும்வழி.

இத்தகுதியுடைய மகோபகாரராகிய நாயசிவ பரம்பொருளை யடையும் வழிகள் பலவுள்ளன. அவைபிற்றை ஈண்டு விரிப்பிற் பெருகும். சுருக்கிக் கூறுகின்றேன். உயிர் என்பது எல்லாத் தேகங்களிலு முண்டு என்றும், அவ்வவ் வுயிர்களுடன் பாலில் வெண்ணெய்போல ஈசுவரன் வியாபித்து நிற்கின்றார் என்றும், யாவரிடத்தும் அன்புபாராட்டின் ஈசுவரார்ப்பணமாகுமென்றும், பிறவுயிர்களை வருத்துவது கொடும் பாவமென்றும், ஆன்மா இறைவனுக்கு எப்பொழுதும் அடிமை என்றும் உணர்ந்து தினந்தோறும் பக்திகொண்டு புறவழிபாடுடன் அகவழிபாடுஞ் செய்தால் மகோபகாரராகிய சிவபெருமானை யடைதல் இலகுவாகும். சிவபரம்பொருளை யடையாவிட்டால் பிறவிப்பிணி நீங்காது. பிறவிப்பயனை யடைதலே ஆவஸ்யகமாகும்.

4 சிவபரம்பொருளை யடைவது ஆவஸ்யகமா?

ஆம். என்னை? சர்வசுதந்தரம் ஆன்மாக்களுக்கு இன்று. ஆனால், ஒவ்வொரு ஆத்மாவும் சர்வசுதந்திர முதல்வனை யடையுந் தன்மையுடைய ‘சித்துப்’ பொருளே! ஆகலின், ஆன்மாத் தன்னை யுணர்ந்து தலைவனைச் சேரவேண்டியது தான் கடமையாகும். தேகமில் வழி ஆன்மாவென்று தன்னை யறிந்து பரமாத்துமாவை யடைய முடியாது. அதனாலே தேகங் கொடுத்தமை காருண்ணியமாமாறு தெளிக. இவைகளை யுணர்ந்து மனிதப் பிறப்பிலே புண்ணியங்களைச் செய்து கடவுளைப் பிரார்த்தித்துப் பதிஞானத்தினாலே நாடி அத்துவைதமாகவேண்டும். இதுவே பரமோக்ஷமாகும்.

5. பரமாநந்தம் பெற்றோர்.

மாநுஷ்ய ஜன்மங் கைவரப்பெற்று விதித்தன புரிந்த சிவதொண்டர்கள் பரமோக்ஷத்துக்குரியரே. அப்படியானாலும், பண்டைக் காலத்தில் இருவினையொப்பும் மலபரிபாகமும் வாய்த்த சந்தான குரவர்களும், சமயாசாரிய மூர்த்திகளும், புறப்பூசையும், இடைவீடின்றித் தியானிக்கும் அகவழிபாடும் அதிதீவிரதரபக்தியோடுஞ்செய்து இறைவனது நித்தியானந்தத்தைப் பெற்றார்கள். சரிதங்களை நூல்களிற் பார்க்கக்காணலாம். ஈண்டமைக.

முடிப்புரை.

சில வசனங்களினாலே இதுவரையுங் கூறப்பெற்ற விஷயத்தின் சாராம்சம் வருமாறு:—மனிதர்கள் செய்யு முபகாரத்தினும் பேருபகாரங் கடவுளாற்செய்யப்படும் உபகாரம் என்பதும் கடவுளருளில்லாவிட்டால் நாம் யாதுஞ்செய்ய முடியாதென்பதும், மகோபகாரத்தைச்சிந்தித்து வந்தித்து, அவரநுக்கிரக சதானந்தத்தைப் பெற முயற்சிப்பது முக்கிய தர்மமாகுமென்பதும் பிறவுமாம்.

மாத்தனை,
இந்துபாட
சாலை 26-1-17.

வ மு. இரத்தினேசுவரையர்.

விளம்பரம்.

## சுதேச வைத்திய ரத்தினம்.

:*:*:*:

### முன்பதிப்புகளைக்காட்டிலும் விரிவானது.

மூன்றுவதுபதிப்பு சித்திரப்படங்களுடன் கூடியது.

இப்புத்தகத்தில் தினந்தோறும் நமது காலடியில் மிதிபடும், புல், செடி, கொடி, காய், கனி பட்டை, கட்டை, வேர், இலை, பூ, பிசின், வித்து முதலியவைகளைக்கொண்டும், நமது நாட்டுக் கடைகளில் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய கடைச்சரக்குகளைக்கொண்டும் வைத்தியர் உதவியின்றி அவரவர்களே, சூரணமாகவும், பஸ்மமாகவும், செந்தூரமாகவும், மாத்திரையாகவும், கஷாயமாகவும் வடகமாகவும், மெழுகாகவும், லேகியமாகவும், திராவகமாகவும் களிபாகவும், பிளாஸ்திரியாகவும், இந்திய ஆயுர்வேத முறைப்படியும், இங்கிலிஷ் வைத்திய முறைப்படியும் செய்து, சாதாரண வியாதிமுதல் பெரியவியாதியும் நாட்பட்டதுமானவைகளுக்கும், உபயோகிக்க வேண்டிய விததனையும், அளவையும், ஒவ்வொரு பதார்த்தங்களுக்கும் தமிழ் இங்கிலிஷ் லத்தின் முதலிய பாஷைகளிலுள்ள பல பெயர்களுடனும் விபரமாய் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் இப்புத்தகத்தில் “வியாதிகளை இலகுவாய்த் தெரிந்துகொள்ள ரோக அட்டவணையும்” ஒவ்வொரு வியாதிகளுக்கும் தமிழ் இங்கிலிஷ் பெயர்களுடனும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் உபயோகிக்கவேண்டிய ஒளஷதங்களையும் எழுதப்பட்டிருக்கிறது. சுருக்கச் சொல்லில் தேக ஆரோக்கியத்தையும், நோயில்லா வாழ்வையும், சகசெல்வ நன்மைகளையும் அளிக்கக்கூடிய புத்தகம் இதுவேயன்றி வேறில்லை. கிரௌன் எட்டுப்பக்க அளவில் சுஎ0 பக்கங்களுள்ளது. ஸ்டிப் பைண்டு விலை ரூபா உ-அ-0. கலிகோ பைண்டு ரூபா ௩. தபால் சார்ஜ் அணு ச. பெதர் வெயிட் என்னும் விலையுயர்ந்த பேப்பர் பதிப்பு கலிக்கோ பைண்டு ரூபா ௩-அ-0. தபால் சார்ஜ் அணு ௬. சிங்கப்பூர் முதலிய அன்னிய நாடுகளுக்குத் தபாற்செலவு அணு அ.

“நமது சிறிய சத்துருக்கள்” அல்லது பிளேக், காலரா, மலேரியா முதலிய கொள்ளை நோய்களின் உற்பத்தி விபரமும் அவற்றிற்கான பரிகாரங்களும் தபாற்செலவுடன் அணு அ.

கம்பனும் கலைமகளும் விலை அணு ச.

விலாசம்:—டாக்டர். எஸ். சந்திரசேகரர்; கும்பகோணம்.

## நாகரீக புதுச் ஜவுளிக் கம்பெனி.

:**:

விலை சகாயம்!

தினுசு நயம்!!

நமது புதுச்ஜவுளிக் கம்பெனியில் தற்காலநாகரீகத்துக்கேற்ற காசி பெனாரிஸ பலகலர்ச் சேலைகளும், தாவணிகளும், துப்பட்டாக்களும், சவுக்கங்களும், ரவுக்கைகளும், கல்கத்தா நார்பட்டு வெண்பட்டுச் சேலை சால்வைத் தினுசுகளும், கொர்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, காஞ்சீபுரம் இன்னும் அநேக ஊர்களில் நெசவுசெய்யப்படுகிற பலகலாப்பட்டுச்சேலைகளும், தாவணிகளும், சிற்றாடைகளும், ரவுக்கைகளும், மதுரை, கோயம்புத்தூர், துயிலி, உப்பாடை, நெல்லூர், 100, 150, 200-ம் நம்பர் நூல்களில் ஜரிகை, விழுதிக்கரை, பின்னல், பணூர்ஸ்பேட்டு, ரோனூர்க்கொடி, மயில்கொடி, சந்திரஹாரக்கொடி இன்னும் புதுமாதிரிக்கொடி, செடிகள் வைத்த ஜரிகைப் பலநிறச் சேலைகளும், தாவணிகளும், டிஸைம்பர் நூலில் மேற்சொன்ன பலதினுசுக்கரைகள்வைத்த விழுதிக்கரை, ஜரிகை 6மூளச் சால்வைகளும், சவுக்கங்களும், 7, 8 முழப் பலதினுசுச் ஜோடிகளும், தலைக்குட்டைகளும், உறுமால்களும், பட்டணப் பலகலர் சாதாக்கரை, ருத்திராக்ஷக்கரை, மாங்காய் பேட்டுகள் வைத்த சேலைகளும், இன்னும் அநேகமாதிரிப் புதுத் தினுசுகளும் ஏராளமாய் உண்டு.

ஒருமுறை நமது கம்பெனிக்கு ஆர்டர்செய்து தினுசுகள் தருவித்துப்பார்த்தால் தினுசுகளின் நயமும் விலையின் சாசமும் தெரியவரும்.

குறிப்பு:—எல்லாவிபரமுமடங்கிய ஜவுளி கெட்லாக் (Catalogue) வேண்டுவோர்க்கு இனாமாக அனுப்புவோம்.

டி. என் அழகரசாமிபாகவதர் & சன்ஸ்,
நாகரீக ஜவுளிவியாபாரிகள், கமிஷன் ஏஜண்டுகள்,
கீழ்மார்க்கட்டுவீதி, மதுரை, (தென்இந்தியா.)

## இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. கர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா ௩.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

உஉ நாள் மருந்தின் கிரயம் ரூ. உ, அணு அ,

3 பிரமேக வியாதிக்குச் சத்துச் செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின்எந்தஇடத்திலும் நடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டபம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.

கச மாத்திரை புட்டி ஒன்று ரூ. ச, அணு அ.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகரோ யுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ. உ.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஒளடதம்.

சக நாள் மருந்தின் கிரயம் ரூ. ச, அணு அ.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும். உஉ நாள் மருந்து ரூ. உ.

8. மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயெடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப் போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ. 0-4-0 டஜன் 1 க்கு ரூ. 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகரோயால் நிரேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் க வேளையிற் குணமாக்கும்.

டப்பி க-க்கு அணு ச. டஜன் க-க்கு ரூ. உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறுதீர்கள்! இதுசமையம்!! தவறுதீர்கள்!!!

### உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வயதுக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்திலால் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொர்தமா, ச. சனத்திரபாகம் எத்தனை, ரு. அது முனனு பின்னு, சு. புத்திரனுண்டா, எ. தனம் வைத்துப் போவேனா, அ. மரணமாகுமிடம் சுயதேசமா, கூ. சொந்தவீடு நிலம் கிட்டுமா, க0. கடன் எப்போது நிவிர்த்தியாகும, கக. விவகாரமஜெயமாகுமா, கஉ. வினோத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ. க.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
கஉ பாகம் சார்ஜ் ரூ. ௬.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வீ. பி. போஸ்தில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசமெழுதினால் ஜோதிஷ, வைத்திய “கியாட்லாக்” இனாமாக அனுப்புவோம்.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S [illegible] Pillai, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.